## நீர் நிலைகளின் தகவல் – கண்காணிப்பு – பாதுகாப்பு அமைப்பின் இணையதளத்தைத் தொடங்கி வைத்தார்!

# நீர்வளத்துறையில் உதவிப் பொறியாளர் 169 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.7.2025) தலைமைச் செயலகத்தில், ஒருங்கிணைந்த பொறியியல் பணிகளுக்கான தேர்வின் மூலம் உதவிப் பொறியாளர் (சிவில்) பதவிக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்டு, நீர்வளத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 169 உதவி பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நீர்வளத்துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், நீர்வளத்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), ச. ரமேஷ், நீராய்வு நிறுவனம் நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு பிரிவின் தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர் பு. சுந்தரராஜன், நபார்டு தலைமைப் பொது மேலாளர் ர. ஆனந்த், TNWRIMS & TNSWIP திட்ட ஒருங்கிணைப்பாளர் கோ. சுப்புராஜ், வசார் லேப்ஸ் முதன்மை செயல் அலுவலர் நிகிலேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, ஜூலை, 4-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.7.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நீர்வளத்துறையில் உதவிப் பொறியாளர் (சிவில்) பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 169 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். மேலும், நீர்வளத்துறை சார்பில் நபார்டு ஆலோசனை சேவைகள் (NABARD Consultancy Services) மற்றும் வசார் லேப்ஸ் நிறுவனம் (VASSAR Labs) மூலம் வடிவமைக்கப்பட்ட 30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு நீர்வள தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பின் இணையதள சேவையையும், 3 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு செயற்கைக்கோள் அடிப்படையிலான நீர்நிலைகளின் தகவல், கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்பின் இணையதள சேவையையும் தொடங்கி வைத்தார்.

**உதவிப் பொறியாளர் (சிவில்) பணி நியமன ஆணைகள் வழங்குதல்!**

ஒருங்கிணைந்த பொறியியல் பணிகளுக்கான தேர்வின் மூலம் உதவிப் பொறியாளர் (சிவில்) பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்டு, நீர்வளத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 169 உதவி பொறியாளர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை 374 நபர்களுக்கு உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

**நீர்வளத்துறையின் இணைய தளங்கள் தொடங்கி வைத்தல்!**

இந்தியாவிலேயே முதன்முறையாக மாநிலத்திலுள்ள அனைத்து ஆற்றுப் படுகைகளிலும் நீர்வரத்து முன்னறிவிப்பு மாதிரியை தானியங்கி முறையில் உருவாக்கியது, அனைத்து தரப்பு நீர் தேவைகளை அறிதல், மாநிலத்தில் உள்ள அனைத்து நீர்த்தேக்கங்களுக்கும் ஒருங்கிணைந்த நீர்த்தேக்க செயல்பாடு ஏற்படுத்தியமை மற்றும் குறிப்பிட்ட இடம் சார்ந்த நீர் சம்மந்தமான விவரங்களை வழங்க புவிநுண்ணறிவு கைபேசி பயன்படுத்துதல் ஆகிய அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு நீர்வள தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு (TNWRIMS)**

தமிழ்நாடு நீர்வள தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பிற்கான (Tamil Nadu Water Resources Information and Management System) இணையதளத்தை உருவாக்கிட தமிழ்நாடு அரசு 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அதன் அடிப்படையில் TNWRIMS இணையதளத்தை உருவாக்குவதற்காக பல்வேறு நீர் பயன்படுத்தும் பங்குதாரர்களிடமிருந்து தற்போதுள்ள எல்லா தரவுகளும் சேகரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் எந்தவொரு நீர் பயன்படுத்தும் துறைகளிடமிருந்தும், எதிர்கால முன்மொழிவை உருவாக்குவதற்கான நீர் தொடர்பான தரவுத்தளத்திற்கான ஒற்றை ஆதாரமாக நம்பகத் தன்மையுடன் இந்த இணையதள அமைப்பு செயல்படும்.

தமிழ்நாடு நீர்வள தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பானது நீர்வளத்துடன் தொடர்புடைய அனைத்து தரவுகளையும் ஒரே கட்டமைப்பில் ஒருங்கிணைத்து நிர்வகிக்கும் அதிகாரப்பூர்வ தீர்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு, நீர் விநியோகம், தேவைகள், செயல்பாடு மற்றும் சுற்றுச்சூழல் கூறுகளை உள்ளடக்கியவாறு, நிலத்தடி நீர் மற்றும் மேற்பரப்பு நீர் ஆதாரங்களான நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள், சிறுபாசன ஏரிகள் போன்றவைகளின் நேரடி கண்காணிப்பு மற்றும் முடிவெடுத்தல் ஆதரவைக் கையாளும் திறன் கொண்டதாகும்.

TNWRIMSன் செயல்திட்ட பணிகள் 26.10.2022 அன்று தொடங்கப்பட்டது. மத்திய நீர் வள ஆணையம் (CWC), இந்திய வானிலை மையம் (IMD), இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (ISRO), மாநில மற்றும் உலகளாவிய தரவுகள் (State and Global Data) ஆகியவற்றிலிருந்து தரவுகளை ஒருங்கிணைத்து, நிகழ்நேரத் தகவலைக் கொண்டு, இந்த ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பு (Real time Dashboards modules) செயல்படும்.

**நீர் பாதுகாப்புத்திட்டம்!**

நிகழ்நேரத் தகவலை அளித்திடும் இந்த அமைப்பில் நீர் வழங்கல், தேவை, தரம், பயனர்கள் போன்றவை, நீர் தணிக்கை, கிராம தண்ணீர் வரவு செலவு, வறட்சி மற்றும் குடிநீர் பற்றாக்குறை நிலவரம், நீர்வரத்து முன்னறிவிப்பு, நீர்த்தேக்க செயல்பாடு மேம்படுத்தல், நீர் பற்றாக்குறை தகவல், நிலத்தடி நீர் தகவல், திட்ட கண்காணிப்பு மற்றும் மேலாண்மை, ஆற்றுப்படுகைகளுக்கிடையே நீர் பரிமாற்றம், நீர் பாதுகாப்பு திட்டம் போன்ற 11 தொகுதிகள் உள்ளன. இந்த இணையதள பதிவு மற்றும் தரவுகள் இடம் பெயர்வுக்கான பணிகள், தமிழக அரசு நீர்வளத்துறை இணையதளத்தில் (http://tnwrims.tn.gov.in) இணைக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு செயற்கைக்கோள் அடிப்படையிலான நீர்நிலைகளின் தகவல், கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்பு (Tamil Nadu Satellite based Water Bodies Information Monitoring and Protection System).**

செயற்கை நுண்ணறிவு மற்றும் செயற்கைக்கோள் மூலம் புதிய தகவல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் சென்னை மாவட்டங்களில் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்பு மற்றும் நீரின் தரத்தை கண்காணிக்க இணையதளம் உருவாக்குவதற்காக 3 கோடியே 55 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நீண்டகால, எளிதாகக் கிடைக்கும் செயற்கைக்கோள் தரவுகளைப் பயன்படுத்தி, வருவாய்த் துறை ஆவணங்களில் வரையறுக்கப்பட்ட நீர்நிலைப்பகுதியின் அளவீடு மூலம் நீர்நிலைகளில் ஏற்படும் ஆக்கிரமிப்பு / அத்துமீறல் போன்றவை செயற்கை நுண்ணறிவு வழிமுறைகளைப் பயன்படுத்தி கண்டறிந்திடலாம்.

இத்தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி, பரப்பளவில் ஏற்படும் மாற்றங்களால் நீர்நிலைகளின் கொள்ளளவு இழப்பை கண்டறியலாம், நீர்நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து துறை சார்ந்த அதிகாரிகளுக்கு நீர்நிலைகளில் உள்ள புல எண்களில் ஏற்படும் மாற்றம் குறித்த விழிப்பூட்டல் தகவல்களை அனுப்பி, ஆக்கிரமிப்பை அகற்றும் பணியை செயல்படுத்தும் முன்னோடி திட்டமாக, அம்பத்தூர் ஏரியில் ஆக்கிரமிப்புகளை கண்டறியும் வசதி செயல்படுத்தப்பட்டுள்ளது.

**ஏரிகளின் நீர் அளவு தொடர்ந்து கண்காணிப்பு!**

செம்பரம்பாக்கம் ஏரியில் உள்ள நீரின் தரத்தை நிகழ்நேரத்தில் கண்காணிக்க உணரி (Sensor) நிறுவப்பட்டு நீரின் தரம், குறிப்பிட்ட அளவுகள் மற்றும் மதிப்புகள் இணையதளத்தில் (http://tnswip.tn.gov.in) நிகழ்நேரத்தில் தெரிவிக்கப்படுகின்றது.

பூண்டி நீர்த்தேக்கத்தில் வண்டல் மண் படிவு கணக்கீட்டுக்காக பேத்மெட்ரிக் மற்றும் ஆளில்லா விமானம் மூலம் தரவுகள் பெறப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் நா. முருகா னந்தம், நீர்வளத்துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், நீர்வளத்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), ச. ரமேஷ், நீராய்வு நிறுவனம் நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு பிரிவின் தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர் பு. சுந்தரராஜன், நபார்டு தலைமைப் பொது மேலாளர் ர. ஆனந்த், TNWRIMS & TNSWIP திட்ட ஒருங்கிணைப்பாளர் கோ. சுப்புராஜ், வசார் லேப்ஸ் முதன்மை செயல் அலுவலர் நிகிலேஷ் குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## புதுக்கோட்டையில் கடலில் தவறி விழுந்து உயிரிழந்த

# மீனவரின் குடும்பத்தினருக்கு ரூ.3 லட்சம் நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 4-

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டம், கோட்டைப்பட்டினம் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்று கடலில் தவறி விழுந்து உயிரிழந்த மீனவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டம், கோட்டைப்பட்டினம் துறைமுகத்திலிருந்து கடந்த 30.6.2025 அன்று நான்கு நபர்களுடன் INDTN08 MM183 என்ற பதிவெண் கொண்ட விசைப்படகில் கடலுக்குள் 12 நாட்டிக்கல் மைல் தொலைவில் மீன் பிடிக்கச் சென்ற மணமேல்குடி வட்டம், கோட்டைப்பட்டினம், கொடிகுளம் கிராமம், ராமநகரைச் சேர்ந்த மந்திரமூர்த்தி (வயது 30) த/பெ.பாண்டி என்பவர் எதிர்பாராதவிதமாக கடலில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

கடலில் தவறி விழுந்து உயிரிழந்த மீனவர் மந்திரமூர்த்தி அவர்களின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

# ‘மாண்புமிகு’ வென உயர்ந்து நிற்கும்

# நம் ஒப்பற்ற தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின்!



**‘SORRY’மா...**

இந்த வார்த்தைகளை மொபைல் ஸ்பீக்கரில் கேட்டதும் நெகிழ்ந்தோர் பலர், கண்களின் ஓரம் லேசாக கண்ணீர் சொரிந்தோர் பலர்!

என்னைப்போல கூடவே இருந்து பழகுகின்ற பெரும் வாய்ப்பைப் பெற்ற வர்களுக்குத் தெரியும், அந்த வார்த்தைகளின் ஆழம், அதில் நெகிழ்ந்தோடும் ஈரம்.

அவை சம்பிரதாய வார்த்தைகள் அல்ல.

அதை நாங்கள் அறிவோம்.

அடடே ..நல்ல சான்ஸ் எதிர்க்கட்சி மிஸ் பண்ணிடுச்சி என அரசியல் ஓநாய்கள் ஓலமிட்டன. அச்சச்சோ ஆட்சிக்கு அவப்பேராகுமே என சிலர் அவதிப்பட்டனர்.

அரசைச் சார்ந்தவர்களால் தவறு நிகழ்ந்து விட்டது, யாரோ செய்த தவறுதானே, எனக்கென்ன என்றிருக்கவில்லை.

தட்டிக்கழிக்கவில்லை,

மூடி மறைக்கவில்லை.

முறையான விசாரணைகள் அதுவும் துரிதமாக. தயங்கவில்லை, தாமே முன்னின்றார், பொறுப்பேற்றார், நினைத்திருந்தால் என்ன வெல்லாமோ செய்திருக்கலாம்!

**வேறு யாராவது இந்த நாற்காலியில் இருந்திருந்தால் கையில் ஆட்சி, போலிஸ், இன்டெலிஜென்ஸ், அரசு இயந்திரம், ஐ.டி.விங், நேரேட்டிவ், செட்டிங் என என்ன வெல்லாமோ செய்திருப்பார்கள் !**

ஆனால் இவையனைத்தும் செய்ய முடியாத ஒன்றைச் செய்து,

“மாண்புமிகு”வென உயர்ந்து நிற்கிறார் திராவிட நாயகர், ஒப்பற்ற நமது முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின்.

தனியொருவராக இந்தப் பிரச்சினையை மிகச் சரியாக ஒரு முதிர்ந்த அரசியல் ஆளுமை யாக, தமிழ்நாடு அவர் மீது வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கைக்கும் பாசத்திற்கும் பாத்திரமாக, ஒரு ‘அப்பா’வாக... ஒரே ஃபோன் கால்! ஒட்டுமொத்த தமிழ்நாட்டில் மனசாட்சி உள்ள அனைவரும் நமது முதலமைச்சர் எப்படிப்பட்ட மகத்தான மனிதர், தலைவர் என்பதை முழுமையாகப் புரிந்து கொண்டனர்.

**He did not pass the responsibility.**

**He Owned up to the mistakes of his subordinates as a Responsible Leader and more importantly as a Human Being with a heart of gold.**

யாரோ செய்த தவறுக்கு இவர் எதற்கு மன்னிப்பு கேட்கவேண்டும் என்று பலர் என்னிடம் கேட்டனர்...யோசித்துப் பார்த்தேன்... பின்பு தெரிந்தது... ஏனென்றால் இவர் தலைமைப் பண்புகள் நிரம்பியுள்ள, மனசாட்சியுள்ள, மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள, ஒரு பொறுப்புள்ள முதலமைச்சர்.

பதவியை ‘பொறுப்பு’ என்று அழைக்கும் ஒரே முதலமைச்சர்.

ஆட்சி வரும், போகும், ஆனால் எந்நேரத்திலும் நியாயத்தின் பக்கம், ஜனநாயகத்தின் பாதுகாவலராக அடிப்படை உரிமைகளின் பக்கம், மனிதாபிமானத்தின் பக்கம், பாதிக்கப்பட்ட குடும்பத்தின் பக்கம் நின்றார் தமிழ்நாட்டின் முதலமைச்சர், எங்கள் பெருமைமிக்க தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்!

**‘ மாண்புமிகு’ சொல்லல்ல செயல்!**

**தலைவர் மு.க.ஸ்டாலின் - வாழ்க**

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர்,
தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர்



---

### கே.குமார் தலைமையில் மதுராந்தகம் நகர இளைஞரணி சார்பில் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்கக் கூட்டம்.

**முத்து முகமது புகாரி ஏற்பாட்டில் நடைபெற்றது.**

*மதுராந்தகம், ஜூலை 4 -*

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்தகம் நகர திமுக இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் தேரடி வீதியில் இளைஞரணி அமைப்பாளர் முத்து முகமது புகாரி ஏற்பாட்டில் நடைபெற்றது. நகர செயலாளர் கே. குமார் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்திற்கு இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் புவன ராகவேந்திரர், ராஜசேகர், உதயகுமார், கருணாநிதி, நவீன், தேவப்பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அண்டோ அனைவரையும் வரவேற்றார்

இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ், தலைமைக் கழக பேச்சாளர்கள் ரஜினி செந்தில், பேரரசன் ஆகியோர் கலந்து கொண்டு நான்காண்டு சாதனைகளை விளக்கிப் பொது மக்களிடையே பேசினர்.

நகரமன்ற தலைவர் மலர்விழிகுமார் துணைத் தலைவர் சிவலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் பிரேம்சந்த், மாணவரணி துணை அமைப்பாளர் சரளா தனசேகரன், உள்ளிட்ட அணி களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கிளை செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குடந்தை அ.இராஜாராமன்
**ஜூலை 4 (2020)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர்.**

**கிளைக் கழகச் செயலாளர், நகரப் பொருளாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**குடந்தை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**பேரறிஞர் அண்ணா பட்டு கூட்டுறவு சங்க தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**